வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்
வழக்குஎண். CC 161/2022
வழக்குசாட்சி PW6

| பெயர் | தயாளன், சிறப்பு உதவி ஆய்வாளர், மாதவரம் பால்பண்ணை காவல் நிலையம் | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | சீனிவாசன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 53 |

தேதி 02.02.2026
எதிரி ஆஜர்.
சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மாதவரம் பால்பண்ணை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. ராஜசேகரன், பாண்டுரங்கன் பணி மாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்புகளை கையாளுவதின் அடிப்படையில் கால விரயம் கருதி சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 2022ஆம் ஆண்டு மாதவரம் பால்பண்ணை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது 26.11.2022ம் தேதி அன்று காலை திரு. சாமிக்கண்னு த/பெ. சீதாராமன் அளித்த புகாரினை பெற்று மாதவரம் பால்பண்ணை காவல் நிலைய குற்ற எண். 515/2022 ஆக இ.த.ச.பிரிவுகள் 380 கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்தார். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் எதிரிகளை தேடிவந்த நிலையில் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் பார்த்திபன் ,வீரா முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ9 ஆகவும், மாதிரி வரைபடமானது அ.,த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் சாட்சிகள் ஏழுமலை, தாமரைசெல்வன் ஆகியோர்ளை விசாரணைச் செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுச் செய்தார். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் திரு. ராஜசேகரன் பணி மாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்பானது உதவி ஆய்வாளர் திரு. பாண்டுரங்கன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அதிகாரி சம்பவ இடத்தினை

பார்வையிட்டு சாட்சிகளிடம் விசாரணை செய்த்தில் முன்னர் கூறியதையே கூறியதால் மறு வாக்குமூலம் பதிவுச் செய்யவில்லை. பின்னர் வழக்கு எதிரிகளை தேடிவந்த நிலையில் 26.11.2022 அன்று காலை 11.00 மணியளவில் மஞ்சம்பாக்கம் சந்திப்பு அருகே வாகன சோதனையில் இருந்தபோது சந்தேகத்திற்கு இடமான எதிரியை விசாரணை செய்தபோது வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதினை சாட்சிகள் கமல், லோகுதாஸ் முன்னிலையில் ஒப்புக்கொண்டதால் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலமானது பதிவு செய்தார்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான நான் திருடி வண்டியில் வைத்திருந்த 3 தங்க தாலி குண்டையும், சம்பவத்திற்கு பயன்படுத்திய இருச்சக்கர வாகனத்தையும் தருவதாக என்று கூறியதன் பேரில் சாட்சிகள் முன்னிலையில் மகஜர் மூலமாக தடையப் பொருளான சுமார் 4.5 கிராம் எடைக் கொண்ட 3 தங்க தாலி குண்டு, TN 18 BE 4167 யமாகா பைக் –1 கைப்பற்றப்பட்டது. பின்னர் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்னர் எதிரி நீதிமன்றத்தில் பிணையம் பெற்று இந்நாள் வரை பிணையில் இருந்து வருகிறார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியானது அ.த'.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மகஜரானது அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்ய்ப்பட்டுகிறது. எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தடைய பொருள்கள் படிவம் 95ன் வாயிலாக நீதிமன்றத்தில் Pl. No. 133/2022 ஆக ஒப்படைவு செய்தார். மேறப்டி படிவல் 95 ஆனது அ.த.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் தான் நான் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வாகனம் ஆகும். மேற்படி சான்று பொருளான இருசக்கர வாகனத்தின் புகைப்படமானது அ.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (4 எண்ணிக்கை) . வழக்கு சொத்தான நகைகளை புகார்தாரரும், இருசக்கர வாகனத்தினை எதிரி நீதிமன்றத்தில் மனு செய்து இடைகாலமாக எதிரியிடம் ஒப்படைவு செய்யப்பட்டது. பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

## குறுக்கு விசாரணை

ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். புகார் 7 நாள் காலதாமதமாக பெறப்பட்டது என்றால் ஆமாம். புகார் பெறப்படுவதற்கு முன்பாக எந்த தகவலும் வரவில்லை என்றால் ஆமாம். கோவில் உள்ளே அம்மனுக்கு சாத்தப்பட்டிருந்த தாளியையும், உண்டியல் காசும் காணாமல் போனதாக தான் புகார் என்றால் ஆமாம். மாதிரி வரைபடத்தில் சம்பவ இடமானது கோவில் நுழைவாயிலிலேயே இருப்பதாக காணப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நுழைவாயிலில் இருந்து அம்மன் கோயில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 10 அடி இருக்கும். நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. கோவில் கோபுரம் 10 அடி என்பதால் மூலஸ்தானம் உள்ளது என்றால் சரியல்ல.

நுழைவாயிலிலிருந்து முலஸ்தானம் அம்மன் எவ்வளவு தூரத்தில் உள்ளார் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். உண்டியல் எங்கு உள்ளது என்பதையும் வரைபடத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கோவிலில் அம்மனுக்கும், பெருமாலுக்கும் தனித் தனி உண்டியல்கள் உள்ளது என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு சென்றிருந்தால் உண்டியல் எங்கு உள்ளது என்று குறிப்பிட்டு வரைபடத்தில் கூறியிருப்பார்கள் என்றால் சரியல்ல. மஞ்சம்பாக்கத்தில் போக்குவரத்து , மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் ஆமாம். 1 முதல் 7 நபர்கள் கோவில் நிர்வாகிகள் என்றால் சரிதான்.

கோவிலில் முன்புறமும், வெளிபுறமும் பார்க்குமாறு சிசிடிவி உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைரேகைப் பதிவுகள் கைப்பற்றப்பட்டு ஒப்பீடு செய்து பார்க்கவில்லை என்றால் ஆமாம். சிசிடிவி பதிவு ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகஜர், கணிணியில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாலி குண்டு என புகாரில் கூறப்பட்டுள்ள நிலையில் தாலி பொட்டுதான் கைப்பற்றப்பட்டது என்றால் இரண்டும் ஒன்றுதான். சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரி கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**